பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 229

திங்கட்கிழமை
14 ஜுலை 2025

ஆனி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**ராஜித தலைமறைவு தேடுகின்றது சி.ஐ.டி.**
விரிவு பக்:- 03

# வெடிப்புச் சம்பவங்களில் இறந்தோரே கொக்குத்தொடுவாய் புதைகுழியில்!

**பெரும்பாலானவர்கள் 13 முதல் 30 வயதுடையவர்கள்**

**31 பேர் பெண்கள், 21 பேர் ஆண்கள்**

**பகுப்பாய்வு அறிக்கையில் தகவல்**

யாழ்ப்பாணம், ஜுலை 14

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட 52 மனித என்புத்தொகுதிகளில், உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இளவயதினர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் வெடிப்புக் காயங்களால் உயிரிழந்துள்ளமையும், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளமையும் பகுப்பாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
11

## நேருக்குநேர் மோதிய மோ.சைக்கிள்கள்; மூவர் காயம்

முல்லைத்தீவு, ஜுலை 14

புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பிரதான வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிவிபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்
11

## இலங்கை - இந்தியா இடையே எரிபொருள் விநியோகக்குழாய்

கொழும்பு, ஜுலை 14

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே 600 மீற்றர் நீளமுடைய எரிபொருள் விநியோகக் குழாய் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் ஒரு
11

## மீண்டும் உயிர்பெற்ற பாலியாற்றுத் திட்டம்

### அமைச்சர்கள் நேற்று நேரடி ஆய்வு வனவளத் திணைக்களமும் ஒப்புதல்

யாழ்ப்பாணம், ஜுலை 14

பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக துறைசார் அமைச்சர்கள் நேற்றுக் களப்பயணம்மேற்கொண்டு நிலைகளை நேரில் ஆராய்ந்ததுடன், மன்னாரில் இது தொடர்பாக கலந்துரையாடலையும் நடத்தினர். அந்தக் கலந்துரையாடலில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வனப்பகுதியை வழங்குவதற்கு வனவளத் திணைக்களம் மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், துறைசார் அமைச்சர்களான தம்மிக்க பட்டபெண்டி, அநுர கருணாதிலக ஆகியோர் நேற்று வடக்குக்கு வந்து நேரில் களப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

கள ஆய்வுக்குப் பின்னர் மன்னாரில் அமைச்சர்கள் தலைமையில் கலந்துரையா
11

## அமெ. வரியைக் குறைக்க அரசாங்கக்குழு பயணம்

கொழும்பு, ஜுலை 14

இலங்கை மீதான அமெரிக்காவின் 30 வீத தீர்வை வரியை மேலும் குறைப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாட்டின் பிரதிநிதிகள் குழு அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் இந்தக் குழு அமெரிக்கா புறப்
11

## வீடு உடைத்துத் திருடியவர் 4 ஆண்டுகளின் பின் கைது



யாழ்ப்பாணம், ஜுலை 14

வீடு உடைத்து நகைகள் திருடிய குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த நபர் நான்கு ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.
11



முச்சந்தி முரளி

‘மூக்கிருக்கும் மட்டும் சளி இருக்கும் என்டமாதிரி எங்கட கடலில மீன் இருக்கும் வரை உவையின்ர அத்துமீறலும் இருக்கும் கண்டியளோ’

**செவ்வந்தியின் தாய் உயிரிழப்பு**
விரிவு பக்:- 03

## தமிழக மீனவர்கள் 7 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜுலை 14

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 7 பேர் நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்
11

## தமிழருக்கு இழைத்த அநீதிகளுக்கு ஒரே சந்தர்ப்பத்தில் விசாரணை

### வலியுறுத்துகின்றார் கஜேந்திரகுமார் எம்.பி.



யாழ்ப்பாணம், ஜுலை 14

1948ஆம் ஆண்டில் இருந்து தமிழ்த் தேசத்துக்கு நடத்தப்பட்ட முழு அநியாயமும், இனப்படுகொலைசெயற்பாடுகளும் ஒரே சந்தர்ப்பத்தில் விசாரிக்கப்பட்டால் மட்டுமே உண்மையான யதார்த்தத்தை விளங்கிக்கொள்ளலாம் என்று அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்
11



## எழுவைதீவுக் கடலில் 38 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஜுலை 14

எழுவை தீவுக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில் 38 கிலோ 700 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் மதிப்பு சுமார் 15 மில்லியன் ரூபா என்று கூறப்படுகிறது.
11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 | திகதி 13.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4131 | சீட்டிழுப்பு இலக்கம் 1198 | சீட்டிழுப்பு இலக்கம் 0157 | சீட்டிழுப்பு இலக்கம் 2237 | சீட்டிழுப்பு இலக்கம் 5889 | சீட்டிழுப்பு இலக்கம் 1919 | சீட்டிழுப்பு இலக்கம் 0464 | சீட்டிழுப்பு இலக்கம் 0005 |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கினம் கன்னி |
| | | | சுப்பர் இலக்கம் 22 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 15 23 24 31 | வெற்றி இலக்கங்கள் 10 20 34 42 | வெற்றி இலக்கங்கள் 1 2 6 8 | வெற்றி இலக்கங்கள் 40 45 61 66 | வெற்றி இலக்கங்கள் 1 1 8 8 2 1 | வெற்றி இலக்கங்கள் 34 37 53 59 | வெற்றி இலக்கங்கள் 8 8 2 1 | வெற்றி இலக்கங்கள் 04 18 43 46 |
| விசேட எழுத்து X | | | | | விசேட எழுத்து I | | |

# இனவழிப்பின் பங்காளியான ஜே.வி.பி.யிடம் நீதி கிடைக்குமா?

## கஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி

**கொழும்பு, ஜூலை 14**

**செம்மணி மனிதப்புதைகுழி பேரவலம் உள்ளடங்கலாக தமிழர்களுக்கு எதிரான போருக்கும், இனவழிப்புக்கும் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்கியது. அப்போதைய இனவழிப்பின் பங்காளியாகத் திகழ்ந்த தற்போதைய அரசாங்கத்திடம் நீதியை எதிர்பார்க்கமுடியாது என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணி மனிதப்புதைகுழி என்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அது ஏற்கனவே சர்ச்சைக்குரிய பேசுபொருளாக இருந்த ஒரு விடயமாகும். கிருஷாந்தி குமாராசுவாமியின் படுகொலை தொடர்பான விசாரணைகளை அடுத்து 1999ஆம் ஆண்டு செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது 15 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன.

அதன் பின்னர் சர்ச்சைக்குரிய அந்த மனிதப்புதைகுழி விவகாரம் தொடர் விசாரணைகளின்றி இடைநடுவே முடக்கப்பட்டது.

தற்போதும்கூட செம்மணி சித்துபாத்தி இந்துமயானத்தில் மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டுவருகின்றன.

உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத்தாக்குதல் சம்பவத்தைப் பொறுத்தமட்டில், அவ்வேளையில் ஆட்சிபீடத்தில் இருந்த மற்றும் அதனைத்தொடர்ந்து ஆட்சிபீடமேறிய தரப்பினர் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான தரப்பினர் என்பதனால், அதுகுறித்த உண்மைகளை வெளிக்கொணரவேண்டிய தேவை தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உண்டு.

இருப்பினும் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தையும், இனவழிப்பையும் அப்போதைய அரசாங்கங்களுடன் இணைந்து ஊக்குவித்து ஆதரித்த மக்கள் விடுதலை முன்னணி, அக்காலப் பகுதியில் உருவான செம்மணி போன்ற மனிதப்புதைகுழிகள் தொடர்பில் எவ்வாறு நீதியான விசாரணைகளை முன்னெடுக்கும்?

இவ்விவகாரம் தொடர்பில் அரசாங்கம் ஒருபோதும் நியாயமான விசாரணைகளை முன்னெடுக்கப்போவதில்லை. சர்வதேச விசாரணையின் ஊடாக மாத்திரமே செம்மணி விவகாரத்தில் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டமுடியும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0597 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கம் 2 6 4 9 3 9 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2863 | ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கம் 03 21 23 44 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 12 20 47 54 | வெற்றி வாரம் 5024 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் 0725 | வெற்றி இலக்கம் 06 18 44 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் 16 31 33 34 | சீட்டிழுப்பு வாரம் 4575 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து C | சுப்பர் இலக்கம் 25 | வெற்றி இலக்கம் 17 19 49 64 | வெற்றி வாரம் 2039 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 13.07.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 03 23 34 38 | வெற்றி வாரம் 2689 |

# இந்தியாவுக்கான வரியும் இலங்கையைத் தாக்கும்!

## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 14

இந்தியாவுக்கு எந்தளவு வரி அறிவிக்கப்படவுள்ளது என்பதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமெரிக்காவினால் இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு 20 சதவீதம் மாத்திரமே வரி விதிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி மலேசியா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆடை உள்ளிட்ட ஏற்றுமதிகளுக்கான கேள்வி வீழ்ச்சியடையும்.

44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ள போதிலும் பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் எம்மைவிடக் குறைவான வரி வீதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமையால் அது அமெரிக்க ஏற்றுமதி சந்தையில் எமக்கு சவாலாக அமையும். இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்த விவகாரத்தில் முழு நாடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# பிளவடையும் சஜித் தரப்பு?



கொழும்பு, ஜூலை 14

ஐக்கிய மக்கள் சக்தியின் உயர் பதவிகளில் மாற்றம் அவசியம் என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும், தொகுதி அமைப்பாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையில் இரு ஜனாதிபதித் தேர்தல்கள், இரு பொதுத்தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சிசபைத் தேர்தல் என ஐந்து தேர்தல்களில் தோல்வி ஏற்பட்டுள்ள நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொகுதி மற்றும் பிரதேச அமைப்பாளர்களை மாத்திரம் மாற்றிப் பயனில்லை எனவும், கட்சி உயர்மட்டத்தில் மறுசீரமைப்பு அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தலைமைப்பதவி மாறாவிட்டாலும் செயலாளர், தவிசாளர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகளில் மாற்றம் அவசியம் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ச-44)

# இலங்கை வருகின்றார் பாக். இராணுவத்தளபதி

கொழும்பு, ஜூலை 14

பாகிஸ்தான் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர், இந்த மாத இறுதியில் இலங்கை மற்றும் இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்புக்கு வருகைதரவுள்ளார்.

இலங்கை விஜயத்துக்குப் பிறகு அவர் இந்தோனேசியாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்த விஜயம் பாகிஸ்தான் மற்றும் இந்த நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# பிரமிட் திட்டங்கள் விழிப்புணர்வு

கொழும்பு, ஜூலை 14

தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தற்போது இந்த பிரமிட் திட்டங்கள் வேகமாக பரவிவருவதைக் கருத்திற்கொண்டு ஒரு வார காலத்துக்கு இந்த விழிப்புணர்வுப் பரப்புரை நடத்தப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவறான குறிவைப்புகள் இலக்காகும் பொதுமக்கள்

## பாதாள உலகக்குழு அட்டகாசம் பொலிஸார் தெரிவிப்பு

**கொழும்பு, ஜுலை 14**

**போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் பயன்படுத்தி பாதாள உலகக் கும்பல் துப்பாக்கிச்சூடுகளை நடத்துவதால், இலக்குகள் தவறி அப்பாவி மக்கள் உயிரிழக்கநேரிடுகிறது அல்லது காயமடைகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த சில தினங்களாக அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளன.

பாதாள உலகக்கும்பலில் பயிற்சிபெற்ற துப்பாக்கிதாரர்களின் பற்றாக்குறை நிலவுகிறது என்றும் பெரும்பாலானவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் அல்லது நாட்டிலிருந்து தப்பிச்சென்ற நிலையில் தங்கள் இலக்குகளை அடைய போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைத் துப்பாக்கிதாரர்களாகப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

போதைப்பொருளுக்காகவோ அல்லது பணத்துக்காகவோ துப்பாக்கிச்சூடுகளை நடத்தும் இந்த நபர்கள், துப்பாக்கிகளைச் சரியாகக் கையாளத் தெரியாததாலும், சுடும்போது ஏற்படும் பயத்தாலும் துப்பாக்கிச்சூடுகள் தவறவிடப்படுகின்றன. இதனால், கடந்த சில வாரங்களாக அப்பாவி மக்கள் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர்.

இதேவேளை இந்த ஆண்டின் 7 மாத காலப்பகுதியில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் தூண்டப்பட்டு 61 துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 35 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ராஜித தலைமறைவு தேடுகின்றது சி.ஐ.டி.

கொழும்பு, ஜுலை 14

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைதுசெய்ய முடியாதுள்ள தாகவும் அவர் அவரது வீட்டில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது தொலைபேசியும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவரைக் கைதுசெய்வதற்காகச் சென்ற குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு சட்டத்துக்கு முரணாக வழங்கிய குற்றச்சாட்டுத் தொடர்பிலான வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுவரும் நிலையில் அவர் முன்னிலையாகவில்லை.


இந்த நிலையில், அவருக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# வவுனியாவில் வீரமக்கள் தினம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 36ஆவது வீரமக்கள் தினம் வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யின் உறுப்பினரும் வவுனியா மாநகரசபையின் முதல்வருமான சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-110)



# ஜனாதிபதி செயலக வாகனச் செலவு பத்தாண்டுகளில் 5.7 பில்லியன்

கொழும்பு, ஜுலை 14

ஜனாதிபதி செயலகம், கடந்த பத்து ஆண்டுகளில் வாகனச் செலவுகளுக்காக 5.7 பில்லியனுக்கும் அதிகமான ரூபாவைச் செலவிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2012 முதல் 2022 வரையிலான பத்து ஆண்டு காலப்பகுதியில், மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகிய ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலங்களில் இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வாகனப் பராமரிப்பு, மேம்படுத்தல்கள், புதிய கொள்வனவுகள் மற்றும் குத்தகை வாகனங்களுக்கான தவணைக் கட்டணங்கள் என ஜனாதிபதி செயலகம் மொத்தம் 5.7 பில்லியன் ரூபாவுக்கும் மேல் செலவிட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின்கீழ் ஜனாதிபதி செயலகத்தின் 2012 - 2022 காலப்பகுதிக்கான பொது நிர்வாகச் செலவுகள் [illegible] வற்கோப்பின்மூலம் இத்தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (ச)

# செவ்வந்தியின் தாயார் சிறையில் உயிரிழப்பு

இஷாரா செவ்வந்தியின் தாயார் கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கட சிறையில் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. கணேமுல்ல சஞ்சீவ கொலையின் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தியின் தாய் மற்றும் சகோதரர், கொலைக்கு உதவிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சுத்திச் சுத்தி சுப்பற்ற கொல்லை!

ஒரு சினிமாப் படத்தில சந்தானம் நாலைந்து அடியாள்களுக்கு தலைவனாக இருக்கும் ரௌடி போல வருவார். தனக்குக் கீழ இருக்கிற அடியாள்கள் சும்மா இருந்தால் தனக்கு ஏதும் தேவையில்லாத ஆப்புவைச்சிடுவாங்கள் எண்ட பயத்தில தேவையில்லாத வேலையளைச் சொல்லிக்கொண்டிருப்பார். ஒருக்காத் திமிங்கலம் எண்ட அடியாளைக் கூப்பிட்டு 'குடோனில இருக்கிற பருத்திமூடையை பண்ணை வீட்டில கொண்டு போய் வை' எண்டுவார். அவனும் அங்க கொண்டுபோய் வைப்பான், உடன இன்னொரு அடியாளைக் கூப்பிட்டு 'அவன் பண்ணை வீட்டில வைக்கிற பருத்திமூடையை தென்னந்தோப்பில கொண்டுபோய் வை' எண்டு ஓர்டர் போடுவார். அவனும் ஓமெண்டு போடுவான். கடைசியா மண்டைக்கசாயம் எண்ட அடியாளிட்ட 'அவன் தென்னந்தோப்பில வைக்கிற பருத்தி மூடையைத் திரும்பவும் குடோன்ல கொண்டந்துவை' எண்டுவார். இதைப் பார்த்துக்கொண்டு நிண்ட இன்னொரு ஆள் "இதுக்குப் பருத்திமூடை குடோன்லையே இருந்திருக்கலாமே" எண்டு அலுத்துக்கொள்ளுவார். அதுக்குப் பிறகு தேவையில்லாத ஆணியளைப் பிடுங்கிற விசயங்களை ஆர் செய்தாலும் "பருத்திமூடை குடோன்ல இருந்திருக்கலாமே" எண்டு சொல்லுறது வழக்கமாப் போட்டுது.

இப்ப யாழ்ப்பாணத்திலையும் சந்தானத்தின்ர பருத்திமூடையள் குடோன்ல இருந்து பண்ணை வீட்டுக்குப் போய், அப்பிடியே தென்னந்தோப்புக்குக் கொண்டுபோய், பிறகு திரும்பக் குடோனுக்கு வந்தமாதிரி வேலையள் நடக்குதாம். அதுவும் இலங்கையில வேற எங்கையுமே இல்லாத நடைமுறையளை இஞ்ச செய்யினமாம். வழக்கமா இலங்கையில இடமாற்றம் செய்யிறதுக்கெண்டு சில நடைமுறையள், விதியள் இருக்கு. ஒவ்வொரு ஓகஸ்ட் மாதமும் ஆரெல்லாம் இடமாற்றம் வேணுமெண்டு விண்ணப்பம் செய்தால், அதை இடமாற்ற சபை வடிவா பார்த்து முடிவெடுத்து, உரிய அனுமதியள் எடுத்து ஒவ்வொரு வருசத் தொடக்கத்திலையும்தான் இடமாற்றம் செய்வினம். இடமாற்றம் செய்யப்படுறவை தங்கட பிள்ளையளின்ர பள்ளிக்கூடங்கள் பற்றி, புது இடத்துக்கு போறதைப் பற்றி, வெளிமாவட்டத்தில செய்த வேலைக்கு முடிவுகட்டி சொந்த இடத்துக்கு வாறதைப்பற்றியெல்லாம் சரியான முடிவெடுக்கத்தான் இப்பிடி வருசத் தொடக்கத்திலேயே இடமாற்றம் செய்யிற நடைமுறையும், இடமாற்றக் கொள்கையளும் இலங்கையில இருக்குது. ஆனால் அதுகளையெல்லாம் குப்பையில போட்டிட்டு, வருசமெல்லாம் வசந்தம் எண்ட கணக்கில யாழ்ப்பாணத்தில வருசம் முழுக்க இடமாற்றம் செய்யிற திருக்கூத்து நடக்குதாம்.

உதவிப்பிரதேச செயலர்கள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரை எல்லாருக்குமே மாறிமாறி இடமாற்றக் கடிதங்கள் பறக்குதாம். ஏன் இடமாற்றம்,எதுக்கு இடமாற்றம் எண்டு கேள்விகூட கேக்க நேரமில்லாம உடனேயே போய் புது ஸ்ரேசனில டியூட்டியைப் பொறுப்பேற்கோணும் எண்டு வெருட்டுகினமாம். ஒவ்வொருநாளும் ஒவ்வொருத்தருக்கு இடமாற்றம் வந்தபடியே இருக்கிறதால, யாழ்ப்பாணத்தில அரசாங்க வேலை செய்யிறவையெல்லாம் "எங்களுக்கு எப்ப இடமாற்றம் வரப்போகுதோ?" எண்டு நெஞ்சிடியில இருக்கினமாம். இலங்கையில யாழ்ப்பாணத்தில மட்டும் தனிராச்சியம் நடக்குதோ? எண்டு கேக்கிற அளவுக்கு, நாட்டின்ர சட்டதிட்டங்களை எல்லாம் மிதிச்சுக்கொண்டு, இப்பிடி வருசம் முழுக்க இடமாற்ற மழை யாழ்ப்பாணத்தில் விடாமல் கொட்டித் தீர்க்குது. சங்கீதக்கதிரைமாதிரி அங்க இருக்கிறவையை இஞ்ச போட்டு, இஞ்ச இருக்கிறவையை அங்கபோட்டால் மட்டும் "என்ர நிர்வாகத்தை எல்லாரும் நல்ல நிர்வாகம்" எண்டு சொல்லுவினம் எண்டு சில உயரதிகாரிமார் நினைக்கினமோ தெரியேலை. பருத்திமூடையைக் குடோனில இருக்கவிடாமல் அங்க இங்க எண்டு சுத்திச் சுழட்டுறதைவிட, சனத்துக்கு நல்லவிதமா எப்பிடிச் சேவை செய்யலாம் எண்டு மேலதிகாரிமார் யோசிச்சிருந்தால் எங்கட யாழ்ப்பாணம் இப்பிடிச் சீரழிஞ்சிருக்குமோ?

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தேவையான பணம் கைக்குக் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் சில முடிவுகளை எடுப்பீர்கள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். முக்கியமான முடிவு எடுப்பதற்குச் சாதகமான நாள். செலவுகளுக்குத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை இருக்காது. உறவினர்கள் சிலர் உங்கள் யோசனையைக் கேட்டுவருவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** உறவினர்களுடன் பேசும்போது பதற்றம் கொள்ளாமல் இருப்பது அவசியம். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் மிகவும் கவனமாக இருக்கவும். எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**கடகம்:** பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அரவணைத்துச் செல்லவும். உணவு வகைகளால் அலர்ஜி ஏற்பட வாய்ப்பு உள்ளதால், வெளியிடங்களில் உண்பதைத் தவிர்க்கவும். மாலையில் உறவினர்கள் வருகை சந்தோஷத்துடன் செலவுகளையும் ஏற்படுத்தும்.

**சிம்மம்:** பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். இளையசகோதரவகையில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது அனுகூலமாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாயின் தேவையறிந்து அவருக்கு உதவுவீர்கள். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவுதருவார். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்றுவருவீர்கள்.

**மகரம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளில்கூட மிகுந்த கவனம் தேவைப்படும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டாலும் பொறுமை காப்பது அவசியம். பிள்ளைகள் வகையில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். இழுபறியாக இருந்து வந்த அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை-வழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**மீனம்:** இன்றைக்குவழக்கமானபணிகளில்மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கும். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



## அமரர் அமிர்தலிங்கம் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 14

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வு வலிகாமம் மேற்கின் இரு இடங்களில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பன்னாகம் அண்ணா கலைமன்றம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையில் அமைக்கப் பட்டுள்ள திருவுருவச்சிலைக்கும், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் மூளாயில் அமைக்கப்பட்ட திருவுருவசிலைக்கும் நினைவேந்தல் முன்னெடுக்கப் பட்டது. நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன், உப தவிசாளர் இலங்கேஸ்வரன், சபையின் உறுப்பினர்கள், ஏற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-41)



## ஆதி ஞான வைரவர் ஆலயத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் நாவாந்துறை வசந்தபுரம் ஆதி ஞான வைரவர் கோவிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டுவைத்தார்.

நிகழ்வில் கோயில் நிர்வாகத்தினர், நாவாந்துறை, வசந்தபுரம் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-20)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தின் பூங்காவனத் திருவிழாவில் அழகிய முத்துச்சப்பறத்தில் விநாயகப் பெருமான் எழுந்தருளி வீதிவலம் வந்தார். (ச-41-17)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் சிறுவர் சந்தை நிகழ்வு அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் வித்தியாலய ஆரம்பப்பிரிவுக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. (ச-41-17)



நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையா கோவிலின் வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு கந்தபுராணத் தொடர் படிப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் ஆரம்பமாகியது.

சிறப்புப் பூஜைகளைத் தொடர்ந்து இந்தக் கந்தபுராணப் படிப்புத் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ச-41-17)

## உதைபந்துப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் மணற்பகுதி புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பி.ப. 3 மணியளவில் இடம் பெறவுள்ளது. போட்டியில் “ஏ” அணியில் சென்.றோக்ஸ் வி.க எதிர் நவிண்டில் கலைமதி வி.கழகமும், “பி” அணியில் கொலின்ஸ் வி.க எதிர் எவறெஸ்ற் வி.கழகமும் மோதவுள்ளன. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 48 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. (ச-41)

## மானிப்பாய் இராஜகாரியர் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மக்களின் நீண்டகாலக் கோரிக்கைக்கமைவாக பிரதேச சபை நிதியில் மானிப்பாய் சந்தியில் இருந்து இராஜகாரியர் வீதி முழுமையாகப் புனரமைப்புச்செய்யப்படவுள்ளது.



இதற்குரிய ஆரம்ப நிகழ்வு பிரதேசசபை தவிசாளர், பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் வட்டார மக்கள் பிரதிநிதி கலொக் கணநாதன் உஷாந்தனால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதில் 200 மீற்றர் முழுமையாகவும் 400 மீற்றர் பகுதி அளவிலும் மொத்தமாக 600 மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட வுள்ளது. (ச-27-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

**நாளொரு நல்வார்த்தை**

தவறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்தச் செயலையும் செய்யாமல் பின்வாங்குவது இழிவானது.

– ஹென்றி போர்ட்

# மீட்சிபெறுமா நெடுந்தீவு?

பன்னிரெண்டு சுற்றுலாப்பயணிகள் மற்றும் இரண்டு பணியாளர்கள் என 14 பேருடன் பயணித்த படகொன்று, நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூழ்கியிருக்கின்றது. தெய்வாதீனமாக அந்தப் பகுதியால் சென்ற படகொன்று, மூழ்கிய படகிலிருந்து காட்டப்பட்ட வெள்ளைக் கொடியை அவதானித்து, அதிலிருந்த அனைவரையும் பத்திரமாக மீட்டெடுத்திருக்கின்றது. விடயம் என்னவென்றால், இறுதிநபர் மீட்கப்பட்ட சில விநாடிகளில் அந்தப் படகு முற்றாகத் தண்ணீருக்குள் மூழ்கியுள்ளது. உதவிக்குச் சென்ற படகு, அந்த வழியால் செல்லாமல் விட்டிருந்தாலோ அல்லது மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஐந்து நிமிடங்கள் தாமதித்திருந்தாலோ இன்று ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் பெரும்சோகம் கௌவியிருக்கும். ஆதலால், மூழ்கிய படகிலிருந்த அனைவரும் சாவைக் கண்டு மீண்டிருக்கின்றனர் என்று கூறினால் அது தகும்.

நெடுந்தீவுக்குத் தற்போது சுற்றுலாவிகளின் வருகை அதிகரித்திருக்கின்றது. வடமாகாணத்துக்கு வரும் தென்னிலங்கை சுற்றுலாவிகளும், வெளிநாட்டுச் சுற்றுலாவிகளும் பயணிக்க விரும்பும் கேந்திர நிலையங்களில் ஒன்றாக நெடுந்தீவு மாறி வருகின்றது. ஒருநாட்டை அல்லது ஒரு பிரதேசத்தை துரித அபிவிருத்தி காணச்செய்வதற்கு, அதற்கு சுற்றுலா சார்ந்த முதலீட்டை மேற் கொள்வது மிக அவசியம். ஆனால், நெடுந்தீவுக்கான அனைத்து வாய்ப்புகளும் அடைக்கப்பட்டு, அதுவொரு சபிக்கப்பட்ட தேசமாக ஆகிவிட்டதோ என எண்ணுமளவுக்குத்தான் அதிகாரத்தரப்பின்நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

நெடுந்தீவின் கடல்சார்ந்த போக்குவரத்துப் பிரச்சினை இன்று நேற்று இருக்கும் விடயமல்ல. இது நீண்டகாலப் பிரச்சினை. சுற்றுலாவிகள் நெடுந்தீவுக்குச் செல்கின்றார்கள் என்றால், சுற்றுலாவிகளுக்கான தரமான போக்குவரத்துப் படகுகளை அரசாங்கம் ஒழுங்கமைத்திருக்கவேண்டும். இதை சுற்றுலா சார்ந்த முதலீடாகவும் மேற்கொள்ள முடியும். இவ்வாறு செய்வதன்மூலம், சுற்றுலாவிகளுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்கி பணம் சம்பாதிக்கும் உள்ளூர் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்து இங்கே முன்வைக்கப்படலாம். அதை மறுப்பதற்கில்லை. எனவே, உள்ளூர் மக்களை மையப்படுத்திய போக்குவரத்தை சுற்றுலாவிகளுக்காகத் திறந்துவிடுவதாக இருந்தால், அதற்கான சேவையில் ஈடுபடும் படகுகளின் தரம் தொடர்பில் தொடர்ச்சியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பரிசோதனைகள் என்றால், சுற்றுலாவை மையப்படுத்திய கடல்சார் போக்குவரத்துக்காக வழங்கப்படும் ஆரம்பகட்ட அனுமதிக்கான போக்குவரத்துப் பரிசோதனை என்று பொருளல்ல. அந்தப் படகு (அனுமதி வழங்கப்பட்ட படகு) தொடர்ந்தும் சேவையில் ஈடுபடக்கூடிய வலிமையுடன் - தரத்துடன் உள்ளதா என்ற பரிசோதனைகளைக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் மேற்கொள்வது அவசியம். எனவே, வழங்கப்படும் அனுமதியை ஆறு மாதங்களுக்கு உரியதாக மட்டுப்படுத்தினால், படகுகள் பரிசோதனைக்கு உட்படும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும். இதன்மூலம் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழியேற்படும்.

ஆக, 'சுற்றுலாவிகள் சென்ற படகொன்று மூழ்கியது' என்ற செய்தியுடன் இந்த விடயத்தைக் கடந்துவிடக்கூடாது. இந்த அசம்பாவிதம் சொல்லி நிற்கும் செய்திகள் ஏராளம். அந்தச் செய்திகள் அனைத்தையும் சீர்தூக்கிப்பார்க்கும் பட்சத்தில் நெடுந்தீவின் சுற்றுலாத்துறை தானாக மகிமை பெறும்.





# ஐ.எம்.எப். பிடியிலிருந்து விரைவில் விலகுவோம்

## விஜித ஹேரத் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 14**

**சர்வதேச நாணயத்தின் பிடியில் இருந்து இந்த நாடு மிக விரைவில் விடுபடும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**


அவர் மேலும் கூறுகையில்;
முன்பிருந்த ஆட்சியாளர்கள் பொருளாதாரரீதியில் இந்த நாட்டை வீழ்த்தி இருந்தார்கள். எல்லா நாடுகளிடமும் கடன் வாங்கியிருந்தார்கள். வங்குரோத்து அடைந்த நாடாக எமது நாடு மாறியிருந்தது. இதன் காரணமாகத்தான் சர்வதேச நாணயநிதியத்தின் உதவியை நாடவேண்டியேற்பட்டது. ஆனால், இதில் இருந்து விடுபடும் இலக்கோடுதான் நாம் செயற்படுகிறோம். விரைவில் விடுபடுவோம். வீழ்ந்த பொருளாதாரத்தை உடனடியாகக் கட்டியெழுப்புவதற்கு அந்நிய செலாவணி உடனடியாக பெறவேண்டியுள்ளது. அதற்கான பல வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம் -என்றார். (ச-75)

## கெஹலிய வழக்கு

# ஆவணங்களை அச்சிட ரூ.1.5 மில்லியன் செலவு

கொழும்பு, ஜூலை 14
போலி இம்யூனோகுளோபுலின் குப்பிகளை இறக்குமதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய உட்பட 12 பேருக்கு எதிரான விசாரணையில் 2000 பக்கங்களுக்கும் அதிகமான ஆவணங்களை அச்சிடுவதற்கு சுமார் 1.5 மில்லியன் ரூபா செலவாகியுள்ளதாக அரசு அச்சகத்துறை மதிப்பிடப்பட்டுள்ளது.
இந்தச் செலவை ஏற்க குற்றப் புலனாய்வுத்துறை ஒப்புக்கொண்டுள்ளது.
இருப்பினும், குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் அரசு அச்சகத்துக்கு இடையேயான பேச்சுகளுக்குப் பிறகு, இந்தத் தொகை ரூ. 866,565 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. வழக்குத் தொடுப்பவர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹகம கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த விடயத்தைத் தெரிவித்தார். (ச-இ)






# விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஜூலை 14
ஹசலகஹெட்டிபொலவில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்கள் பரவர்தன ஓயா மற்றும் ஹசலகவைச் சேர்ந்த 28 மற்றும் 73 வயதுடையவர்களாவர். (ச-இ)

# வரிச் சலுகையில் மக்களுக்கு அநீதி

கொழும்பு, ஜூலை 14
நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படும் வருமானவரி சாதாரண மக்களிடம் இருந்து அறவிடப்படும் வரியைவிட மிகக் குறைந்தது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மாதம் ஒன்றில் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அடங்கலாக 3 இலட்சத்து 27 ஆயிரத்து 713 ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெறும்போது அதற்கு வரியாக 3 ஆயிரத்து 720 ரூபா மாத்திரமே அறவிடப்படுகிறது. சாதாரண மக்கள் இதேதொகையைச் சம்பளமாகப் பெறும்போது அவர்களிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா வரியாக அறவிடப்படுகிறது. எனவே வரிச்சலுகையில் பாரபட்சம் காட்டப்படக்கூடாது எனப் பல தரப்புகளிடமிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. (ச-75)

## ஐந்து மாதங்களில்

# ஆடை ஏற்றுமதி வருவாய் 2,141.7 மில்லியன் டொலர்


கொழும்பு, ஜூலை 14
இலங்கைத் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் தைத்த ஆடை ஏற்றுமதி வருமானமாக 2,141.7 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டின் ஏற்றுமதி வருமானம் 1,961 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அதன்படி 180.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைநிர்ணயத் தீர்வின்பின்பே மாகாணசபைத் தேர்தல் நடக்கும்

## அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 14**

**நிர்ணயப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு அதன் பின்னரே மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள் ளோமென மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

மாகாணசபைத் தேர்தல் குறித்து வினவியபோது அவர் மேலும் தெரி வித்ததாவது:-

உள்ளூராட்சிமன்ற சபைகளை நிய மிக்கும் பணிகள் நிறைவடைந்ததும், மாகாணசபைத் தேர்தலுக்கான நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். மாகாண சபைத் தேர்தலை புதிய தேர்தல் முறைமையில் நடத்துவதா அல்லது பழைய தேர்தல் முறைமையில் நடத் துவதா என்பதில் சிக்கல் காணப்படு கிறது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் எல்லை நிர்ணய பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண் டும். இவ்விடயத்தில் முரண்பாடற்றவகை யில் தீர்வுகாண்பது அத்தியாவசிய மானது. அதற்கான ஆரம்பகட்ட நட வடிக்கைகள் தற்போது மேற்கொள் ளப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாணசபைகள் தொடர்ந்து இயங்குவது ஜனநாயக முறைமைக்குப் பொருத்தமானதாக அமையாது - என்றார். (ச-இ)

# தீவுகளுக்கு வரும் சுற்றுலாவிகள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்!

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். குடாநாட்டில் தீவுப்பகுதிகளுக்கு சுற்றுலாச் செல்லும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்த அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடற்போக்குவரத்து சேவை வழங்கும் படகுகளின் தரம் மற்றும் முன் பாதுகாப்பு ஏற்பாடு கள் ஆகியன தொடர்பில் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுமாறு பொலிஸ் மற்றும் கடற்படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார். நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவ ருக்குச் சொந்தமான சுற்றுலாப்பயணிகளை ஏற் றும் சிறிய ரக படகில் நெடுந்தீவுக்குச் சென்று திரும்பும்போது படகில் ஏற்பட்ட கோளாறு காரண மாக படகு மூழ்கியுள்ளதுடன் பயணிகள் 12 பேர் 2 பணியாளர்கள் எனப் 14 பேர் உயிராபத்து இன்றி மீட்கப்பட்டுள்ளனர். கடல் பயணத்தின் போது பின்பற்றவேண்டிய முன்பாதுகாப்பு ஏற்பா டுகள் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் ஏற்க னவே விடுக்கப்பட்டுள்ளன. அவை முழுமையாகப் பின்பற்றப்படவேண்டும் எனவும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். (ச-20-26-66)

# திருவாசக அரங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நாவற்குழி சிவபூமி திருவா சக அரண்மனையில் புதி தாக அமைக்கப்பட்ட சிவ பூமி திருவாசக அரங்கத் தின் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் அவுஸ்திரேலி யாவைச் சேர்ந்த மருத் துவ நிபுணர் வை.மனோ மோகன் சிவகௌரி தம்ப திகள் பிரதம விருந்தின ராகவும், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் சிறப்பு விருந்தினராகவும், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரி யர் சி.சிறிசற்குணராஜா கௌரவ விருந்தினரா கவும் கலந்துகொள்ள வுள்ளனர். (ச-66)

# இந்தியாவின் தேவைக்கே புலிகள் செயற்பட்டனராம்!

## பேராசிரியர் இந்துராகரே தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

இலங்கையை இரண்டாகப் பிளவு படுத்தும் இந்தியாவின் தேவையை நிறைவேற்றுவதற்காகவே புலிகள் முன்னிலையானார்கள் என்று பேரா சிரியர் இந்துராகரே தம்மரதன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக் களின் நன்மைக்காக முன்னிலை யான அமைப்பு கிடையாது. நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் இந்தியா வின் தேவைப்பாட்டுக்காகவே அவர் கள் முன்னிலையா னார்கள். நாட் டைப் பிளவுபடுத்தும் இந்தியாவின் தேவைப்பாடு இன்றளவிலும் துளி கூட மாறவில்லை.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தத்தை இலங் கையால் மீறமுடியுமா? ட்ரம்ப் வரி போல் எதிர்காலத்தில் மோடி வரிகூட விதிக்கப்படலாம் - என்றார். (ச-44)



யாழ்ப்பாணம் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவ னேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவத்தின் திருமஞ்சத் திருவிழா புலம்பெயர்வாழ் இத்திமரத் தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபையின் அனுசர ணையுடன் பக்திபூர்வமாக அண்மையில் நடை பெற்றது. (ச)



# சாவகச்சேரி சந்தைக் கட்டம் இடிந்துவிழும் அபாயத்தில்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

சாவகச்சேரி நகரசபையின் நிர்வகிப் பின் கீழுள்ள புதிய சந்தைக் கட்டடத் தின் பெரும்பாலான பகுதிகள் உடைந்துவிழும் அபாயநிலையில் காணப்படுவதாக உபதவிசாளர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.

நகர்ப்புறங்களில் காட்சிப்படுத்தப் பட்டுள்ள தேவையற்ற விளம்பரப் பலகைகள் தவிசாளரின் ஆலோச னைக்கு அமைவாக உப தவிசாளர் மற்றும் உறுப்பினர் கண்காணிப் பில் சுகாதார ஊழியர்களினால் நேற்று அகற்றப்பட்டபோதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த கட்டடம் 1980ஆம் ஆண்டு கட்டப்பட்டபோதிலும் 2000ஆம் ஆண்டு யுத்தத்தில் பெரிதும் பாதிக் கப்பட்டு மீள் புனரமைப்புச் செய்யப் பட்டு மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ஒ-28)

# யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

அன்னராசா டயோசன் 9ஏ,கோபால கிருஷ்ணன் மிதிலினி 9ஏ,மகேஸ்வரன் பவிஷன்9ஏ,விஜயானந்தன் தமிழினி யன்9ஏ,ஜெயதாஸ்சானிலா 9ஏ,உதயசூரி யன் அகநிலவன் 8ஏபி,வெற்றிக்குமரன் ராகவி8ஏசி,கிருஸ்ணாகரன் ஓவியா 8ஏசி,சிவயோக நாதன் ரியானன் 7ஏ2பி,மகேஸ்வரன் நளாயினி 7ஏ2பி,திருக்குமார் அக்சரா 7ஏ2பி,சசிகு மார் அக்சயா 7ஏ2பி,விமலதாசன் தனு சியா 7ஏ2பி,அன்பழகன் டேனுஷன் 6ஏ3பி,வசந்தகுமார் கம்சனா 6ஏ2பிசி, உதயசந்திரன் வேணுசன் 5ஏ3பிசி,வசந்த நாதன் கிஷானிகா 5ஏ3பிசி,வரதராசா பவிதா 5ஏ3பிசி,கோகுலன் அனொஸ்கா 5ஏ2பி2சி,தயாகரன் குவிந்தன் 5ஏ2 பி2சி,செல்வரத்தினம் ஜெனனி 5ஏபிசி2எஸ்

## யாழ்.பல்கலை விவசாயபீடத்தின்

# உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 14


யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத் தின் 11ஆவது உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 'மீளுருவாக்க விவசாயத்திற்கான பல் துறை அணுகுமுறைகள்' என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சி அறி வியல் நகர் வளாகத்தில் அமைந் துள்ள விவசாயபீட மாநாட்டு அரங்கத் தில் நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். பேச்சாளர் களாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி மஞ்சுள குலரத்ன நியூசிலாந்தின் லிங்கன் பல்கலைக்கழகத்திலிருந் தும், ஜப்பான் யமகடா பல்கலைக்கழ கத்தின் இணைப் பேராசிரியர் யுகா [illegible]விலிருந்தும் விவசாய பீடத்துக்கு வருகைதருவதோடு, இலங்கை பேராதனைப் பல்கலைக்க ழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹிமால் சுரவீரவும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வ தேச ஆய்வாளர்களால் பயிராக்க வியல், விலங்கு விஞ்ஞானம் மற்றும் நீருயிரினவளர்ப்பு, பயிர் பாதுகாப்பு மற்றும் உயிர்தொழிநுட்பவியல், மண், சூழல் மற்றும் நீர் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் மற்றும் போசனையும், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப்பொருள்களில் 37 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படவுள்ளன.


அறிவியல் நகர் வளாகத்தில் அமைந் துள்ள விவசாயபீடமானது பிரதே சத்தை மையப்படுத்தி உலர்வலய விவ சாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை 2015ஆம் ஆண்டு தொடக் கம் வருடந்தோறும் நடத்திவருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ச-41)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வில்லிசை நிகழ்வு

யாழ். ஜூலை 14
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, தவத்திரு அருணகிரிநாதர் சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு ஈழநல்லூர் ஸ்ரீ தேவி வில்லிசைக் குழுவின் இயக்குனர் எஸ். எஸ். குருஜி தலைமையில் அணிசெய் கலைஞர்களின் தெய்வீக வில்லிசை இடம்பெற்றது. (ச-25,66)





வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 16ஆவது நாள் மாலைத் திருவிழாவான தெப்போற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மிகவும் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் இடம்பெற்றது. (ச-66)



# கிளிநொச்சி மாவட்ட சதுரங்கப் போட்டி

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் ஏற்பாட்டில் சதுரங்கப்போட்டி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது. 7,9,11,12,15,17 வயதுப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கான போட்டியும், 17வயதுக்கு மேற்பட்டோருக்கான திறந்த போட்டியும் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத் தலைவர் தி. சிவரூபன் தலைமையில் நடைபெற்ற போட்டியின் முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. கி.பிரதீபா, சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி வலயக்கல்வி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திருமதி. இளவேந்தி நிர்மலராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,113)

# அரியாலை பொதுச் சுகாதாரப் பிரிவில் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றல்



யாழ்ப்பாணம், ஜூலை 14
அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. ஒரு நாய்க்கான தடுப்பூசிக்கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும்.

அதன் பிரகாரம் இன்று திங்கட்கிழமை புங்கன் குளம் வீதி அரியாலை சனசமூகநிலையத்தில் மு.ப. 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரையும், பென்ரிகோஸ் லேனில் மு.ப 11 மணி தொட்க்கம் பி.ப. 1 மணி வரையும், கண்டி வீதி தியாகராசா பதிப்பகத்தில் பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். நாளை செவ்வாய்க்கிழமை கண்டி வீதி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், ஏ.வி. ரோட் மிருக வைத்திய நிலையத்தில் மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை யும், இலந்தைக்குளம் பிரப்பங்குளம் அம்மன் கோவிலடியில் பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். நாளை மறுதினம் புதன்கிழமை கலைமகள் சனசமூக நிலையத்தில் மு.ப. 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், காந்தி சனசமூக நிலையத்தில் மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரையும், அருணோதயா சனசமூக நிலையத்தில் பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். 17ஆம் திகதி திருமகள் சனசமூக நிலையத்தில் மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், மலர்மகள் சனசமூக நிலையத்தில் மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரையும், நாயன்மார்கட்டு செம்மணி வீதி பாரதி சனசமூக நிலையத்தில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். 18ஆம் திகதி பேச்சி அம்மன் கோவிலடி அம்பாள் சனசமூக நிலையத்தில் மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாடசாலை அருகில் மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரையும், பொன்னம்பலம் வீதி கலைவானி சன்சமூக நிலையத்தில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். 21 ஆம் திகதி முள்ளி வீதியில் மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், ஆள்காட்டி வீதி அருளம்பதி சந்தியில் மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரையும், இராஜேஸ்வரி வீதியில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். 22 ஆம் திகதி கனகரட்னம் வீதி நாவலர் வீதிச் சந்தியில் மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், கனகரட்னம் மகா வித்தியாலயம் அருகில் மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரையும், பாரதி வீதி முதலியார் வீதிச் சந்தியில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். 23 ஆம் திகதி கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச் சந்தி மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், பேரின்பநாயகம் வீதியில் மு.ப 11 மணி தொடக்கம் மு.ப 1 மணிவரையும், கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தியில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். 24 ஆம் திகதி சாஸ்திரியார் வீதியில் மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரையும், சந்தனமாதா ஒழுங்கையில் மு.ப 11 மணி தொடக்கம் பி.ப 1 மணி வரையும், கச்சேரி கிழக்கு புகையிரதப் பாதை ஒழுங்கையில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும். (ச-25)

# "நீதம்" சட்ட இதழ் வெளியீட்டு விழா


யாழ்ப்பாணம், ஜூலை 14
யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் 'நீதம்' சட்ட இதழின் வெளியீட்டு விழா பல்கலைக்கழக கைலாசாபதி கலையரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசர் குமுதினி விக்கிரமசிங்கே, கௌரவ விருந்தினராக யாழ். சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன் உள்ளிட்டோருடன் முன்னாள் துணைவேந்தர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வின் இறுதியில் சட்டத்துறை மாணவர்களால் எழுதி வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளுக்கான சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டதுடன் விருந்தினர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 10 . 1951

மறைவு 21 . 06 . 2019

அமரர்

## செல்லையா சிவலிங்கம்

திதி : சதுர்த்தி (14.07.2025)

அவர்களின் ஆறாம் ஆண்டு நிகழ்வு இன்று (14.07.2025) திங்கட்கிழமை அவரது நினைவாக அஞ்சலி செலுத்துகின்றோம்.

இல.55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
077 376 8952

மைதிலி நகை மாடம் (PVT) Ltd.
89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம் : 23.10.1949

மறைவு : 15.06.2025

## அமரர் மல்லிகாதேவி சிவானந்தம்

திதி: வைகாசி சங்கடஹர சதுர்த்தி

கடந்த 15.06.2025 ஞாயிற்றுக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் மல்லிகாதேவி சிவானந்தம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (14.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். அத்தோடு இறுதிக்கிரியைகளின் போது எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் நல்கியோருக்கும், மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் அனுதாபங்கள் தெரிவித்த உள்ளூர், வெளியூர் உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்ட மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இந்திரஜோதி சிவகோசரி (ஜோதி)



தோற்றம் 06.10.1957

மறைவு 12.07.2025

சாவகச்சேரி நுணாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரஜோதி சிவகோசரி அவர்கள் கடந்த (12.07.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் கல்வயலைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசுவாமி சிவகோசரி (ஜோதி புடவை உரிமையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணகைப்பிள்ளை தம்பதிகளின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகளும், சோபனா (லண்டன்), அனுஷா (லண்டன்), ஜனகன், தேவகி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சங்கர் (லண்டன்), நடனசீலன் (லண்டன்), மதுரிகா (Boc பரந்தன்), ஐங்கரன் (மக்கள் வங்கி பிரதி முகாமையாளர்) ஆகியோரின் அன்பான மாமியாரும், சிவஹரிஸ், சாதனா, ஆருத்ரன் ஆகியோரின் அன்பான அம்மம்மாவும், அகன்யா, சிவானுஜன் ஆகியோரின் அன்பான அப்பம்மாவும், காலஞ்சென்ற கைலேஸ்வரன் (ஓய்வு நிலை அதிபர் சா/இந்து ஆரம்ப பாடசாலை) மற்றும் கருணாகரன் (மருந்தாளர்), காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தங்கையும், சந்திர ஜோதி, மங்கள ஜோதி (France) மற்றும் குமரேந்திரன் (German) ஆகியோரின் அன்பான அக்காவும், வனிதா தேவி, சோமாவதி, மல்லிகாவதி, சண்முகநாதன், காலஞ்சென்ற அற்புதநாதன் மற்றும் ஈஸ்வரி, காலஞ்சென்ற பிறைசூடி, குமரகுரு, நந்தகுமாரன், ஆகியோரின் அன்பு மைத்துனியும், சந்திரலதா, நிர்மலன், மனோகரன், நிரஞ்சன், யதுர்சனா ஆகியோரின் அன்பு மாமியும், சஜேந்திரன், கிரிசாந்தன், நிவேதா, அருனேஷ் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், கரிதர்ஷன், கவிநயா, கவினேஷ், டிலூசன் யுஹான் பினோதா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (14.07.2025) காலை 08.00 மணி முதல் ஆரம்பித்து காலை 10.00 மணி அளவில் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
மகன் - 077 333 3833
மகன் - 077 308 3295

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19 . 10 . 1937

விண்ணில் 05 . 07 . 2025



## பொன்னையா நடராசா
(அண்ணா தொழிலகம்)

பிரிவொன்றும் இல்லை...
உங்களின் அழகான நினைவுகளுடனே...
விடிகிறது எங்களின் காலைகள்!
உங்களின் அன்பு நிறைந்த பாதையிலேயே...
நகர்கிறது எங்களின் நாட்கள் !
உங்களின் இனிமையான கனவுகளுடனேயே...
நிறைகிறது எங்களின் இரவுகள்!
எனில் பிரிவொன்றும் இல்லை...

அன்புடன் குடும்பத்தினர்

(CS 45493) E

# வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் உள்ள பிரபலமான புடைவை விற்பனை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் வேலை ஆட்கள் தேவை

1. விற்பனையாளர்
2. பில் கிளார்க்
3. பைக்கிங் செய்பவர் உடன் தேவை


தொடர்புக்கு: 076 028 9835, 074 138 8156

(CR 45502) E

# 15ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 . 03 . 1966

உதிர்வு 15 . 07 . 2010



## அமரர் செல்லத்துரை பாலச்சந்திரன்

திதி- சதுர்த்தி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கி விரைந்து
ஆண்டு பதினைந்து ஆனாலும்
கண் விட்டு மறையாது என்றும்
உங்கள் நினைவுகள்

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

உம்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்., ஜூலை 14 வட்டுக்கோட்டை சவாரிப் பிரியர்களின் ஏற்பாட்டில் மாபெரும் சவாரிப் போட்டி அராலி பூனாவோடை சவாரித்திடலில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

முதலாமிடம் பெறும் காளைகளுக்கு சவாரி வண்டில் பரிசாகவும் இரண்டாமிடம் பெறும் காளைகளுக்கு 43 இஞ்சி அளவுடைய தொலைகாட்சிப்பெட்டியும் மூன்றாமிடம் பெறும் காளைகளுக்கு நீரிறைக்கும் இயந்திரமும் வழங்கப்படவுள்ளன. பங்குபற்றும் காளைகளுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(சு-25)

# மரண அறிவித்தல்



தோற்றம் 12.11.1963

மறைவு 12.07.2025

## கதிர்காமத்தம்பி கிருஸ்ணமூர்த்தி (கிட்டு)

பொன்னையா வீதி, பன்னாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி கிருஸ்ணமூர்த்தி (கிட்டு) அவர்கள் (12.07.2025) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சிதம்பரநாதன்-ராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மதிவதனியின் அன்புக் கணவரும், நவரத்தினம், சிவகுமார் (அவுஸ்ரேலியா), செல்வரட்ணம், சிவராசா, காலம்சென்ற கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், லக்சனா (ஆசிரியர் - யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), உமாராஜ் (லண்டன்), தனுராஜ் (லண்டன்), மதன்ராஜ், லக்சிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், திலீபன் (ஆசிரியர்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), தனுஷிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிதார்த், ஆஷிகா ஆகியோரின் அன்பு பேரனும், மதிவர்ணன் (கனடா), ரமணன் (திருகோணமலை), தர்சினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 56853) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# விழிப்புணர்வு நடைபவனியும் போசணைக் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜுலை 14

வேள்ட் விஷன் லங்கா நிறுவனமானது சங்கானைப் பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் இணைந்து நடத்திய "பசியைப் போக்குவோம்" எனும் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனியும் போசணைக் கண்காட்சியும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

நடைபவனி சங்கானைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்து சங்கானை கலாசார மண்டபத்தைச் சென்றடைந்து அங்கு விருந்தினர்களால் போசணைக் கண்காட்சி ஆரம்பித்துவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போசணை பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டம் இடம்பெற்றது. நிகழ்வில் சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி பிரணவசொரூபி சிவகரன், பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன், வலிகாமவலயப் பிரதிக் கல்விப்பணிபாளர் சஞ்சீவன், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் யதுநந்தனன், வலிகாமம் மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன், போதுமான பிரசாரம் முகாமையாளர் செல்வி லாவண்யா சூரியகுமார், உலக பார்வை முகாமையாளர் யூட் நிசாந்தன், அரச உத்தியோகத்தர்கள், உலகப் பார்வை உத்தியோகத்தர்கள், சங்கானைப் பிரதேச சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் கண்காட்சியை பார்வையிடுவதற்கு சிறப்பாக மேலதிக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன், சமுதாய மருத்துவ நிபுணர் சிவகணேஸ் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)




# சிறுபோக அறுவடை வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, ஜுலை 14


வவுனியாவில் சிறுபோக அறுவடை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கையின் அளவை விட இம்முறை ஐயாயிரம் ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இம்முறை 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டது. தற்போது வரை 30 வீதமான நெல் அறுவடை முடிவடைந்துள்ளது. இதேவேளை அரசாங்கத்தினால் நெற்கொள்வனவுக்கான நிர்ணய விலை அறிவிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் நெற்கொள்வனவு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. வவுனியா மாவட்டத்திலும் நெற்கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

# சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், ஜுலை 14

இணுவில் பொது நூலக சிறுவர் திறன்விருத்தி மையை சிறுவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு ஆசிரியர்களது விசேட ஒழுங்கமைப்பிலும் வழிகாட்டலிலும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர் இரா அருட்செல்வம், அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை, நிர்வாக உத்தியோகத்தர் பொ. சுந்த ரலிங்கம், தலைவர் ம. கஜந்தருபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-27-66)

## மரண அறிவித்தல்



### இராமநாதன் குமாரசாமி

**(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்-நில அளவைத் திணைக்களம்)**

நெடுந்தீவு மேற்கு இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 94/7 உரும்பிராய் மேற்கு உரும்பிராயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் குமாரசாமி அவர்கள் நேற்று (13.07.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கமாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, பெரியநாயகி, பசுபதி, செல்லம்மா, தையலம்மை, சுந்தரம்பிள்ளை மற்றும் தம்பையா,ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற தர்மரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, இரவீந்திரகுமார், தயாளினி, வனிதா, திரிநயினி, பத்தஅரிகரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற குருபரன் மற்றும் செல்வகுமார் (ஆசிரிய ஆலோசகர்-தீவக கல்வி வலையம்), குமுதினி (ஜேர்மனி), செல்வந்தி (ஜேர்மனி), பாமினி (சமுர்த்தி வங்கி முகாமையாளர்-நெடுந்தீவு), ரேணுகா (ஆசிரியர்- யா/கொடிகாமம் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்), திருக்குமார் (ஊழியர் கால்நடை வைத்தியநிலையம்-நெடுந்தீவு), தர்மகுமார் (அதிபர் யா/கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஸ்தூரி (ஆசிரியர் -யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), சந்திரகுமார் (ஜேர்மனி), கோணேஸ்வரன், சுதாகர் (பாடசாலைப் பணியாளர், யா/கச்சாய் மகா வித்தியாலயம்), சுபதர்சினி, பாத்திமாசுமையா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜீவன், விதுசிகா, கிரிசாந், சோபியா, அனோஜ், ஆரபி, மிதுன், மிரசா, ஹரசன், தாரகா, விபூஜா, நிவர்த்திகா, கிருசன், யதிகா, கம்சிகா, விதீஸ், விபிசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்,
077 495 6897



# புங்குடுதீவு நசரேத் அணிக்கு சென். பிலிப்ஸ் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜுலை 14

அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் தீவக ரீதியாக நடத்திய ஆண்,பெண் இருபாலாருக்கான உதைபந்தாட்டத் தொடரில் புங்குடுதீவு நசரேத் பெண்கள் அணி வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியுள்ளது. புங்குடுதீவு நசரேத் மற்றும் புங்குடுதீவு பாரதி ஆகிய மகளிர் விளையாட்டுக் கழகங்கள் இறுதிப்போட்டியில் மோதிய நிலையில் புங்குடு தீவு பாரதி விளையாட்டுக்கழக மகளிரணியை 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் புங்குடுதீவு நசரேத் மகளிர் உதைபந்தாட்ட அணி தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலாளர் கே. சிவகரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

பகுதியாக, இந்தியாவிலிருந்து திருகோணமலைத் துறைமுகம் வரை கடலுக்கு அடியில் எரிபொருள் விநியோகக் குழாய் ஒன்றை அமைக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனா எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அதையடுத்து, இந்தியா கடலுக்கு அடியில் எரிபொருள் விநியோகக் குழாயை அமைக்கத்திட்டமிட்டுள்ளது என்று இந்தியத் தகவல்கள் கூறுகின்றன. (அ-எ-75)

## நேருக்குநேர்...

துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் மூங்கிலாறு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மூவரும் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் அதிக வேகத்துடன் பயணித்தது என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம்தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (அ-எ-19)

## வீடு...

2021ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுண்டிக்குழிப் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு தொகுதி நகைகளும் மீட்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில், பொலிஸாரால் தேடப்பட்டுவந்தார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 42 வயதான இந்தச் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து வந்தபோது யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். திருடப்பட்ட நகைகள் சந்தேக நபரிடம் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## அமெ...

படும் என்று ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவிடமிருந்து மேலதிக வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தீர்வை வரிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் முன்னேற்றம், தற்போதைய நிலைமை மற்றும் தீர்வை வரிக் கொள்கையால் ஏற்படக்கூடிய பொருளாதாரச் சவால்கள் தொடர்பில் ஏற்றுமதி கைத்தொழில் தொடர்பான அனைத்துத் தரப்பினருடனும் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## தமிழக...

டுள்ளனர். இவர்கள் தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வடமேற்குக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுடன், அவர்களின் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் 181 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 24 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (அ-எ-35)

## தமிழருக்கு...

பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளின் பேரவையின் ஆணையாளர் கடந்தவாரம் இலங்கைக்கு வந்தபோது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக தலைவர்கள் செயற்பாட்டாளர்களின் ஒப்புதலோடு ஒரு கடிதத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரிடம் வழங்கினோம். அந்தக் கடிதத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் கையொப்பமிட்டிருந்தார்.

ஆயினும் அடுத்த வாரமே இலங்கை தமிழரசுக் கட்சி தலைவரும், பொதுச் செயலாளரும் செம்மணி விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்திடம் அந்த விசாரணை நடத்துவதற்குரிய அங்கீகாரத்தைக் குறிப்பிட்டு, அதற்கு மேலதிகமாக ஒரு சில சர்வதேச தரப்புகளின் கண்காணிப்போடு செய்வதற்குரிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர். இது நேருக்கு நேர் முரண்பட்ட நிலைப்பாடு.

செம்மணியில் நடந்தது அநியாயம். இலங்கை அரசு அதை மூடி மறைக்க முயற்சித்த நிலையில் எதேச்சையாகத் தற்போது வெளிவந்துள்ள ஆதாரங்களை மூடிமறைக்கின்ற சந்தர்ப்பங்களை வழங்குகிறீர்கள் என்பதாகவே இந்தக் கடிதத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காக எதிர்வரும் வார இறுதியில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களையும் மனித உரிமை அமைப்புகளையும் ஓரிடத்தில் சந்தித்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி எழுதிய கடிதத்தை எந்தவிதமான பின்வாங்கலும் இல்லாமல் மிக இறுக்கமாக அனைவராலும் கடைப்பிடிப்பதற்குரிய அணுகுமுறையை உறுதிப்படுத்தவுள்ளோம். இந்தக் கூட்டத்துக்கான உத்தியோகபூர்வ அழைப்பு அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பப்படும். (அ-எ-26)

## எழுவைதீவுக்...

கடற்படையினர் நடத்திய விசேட தேடுதலில் சந்தேகத்துக்கிடமான மிதக்கும் பை ஒன்று கண்டறியப்பட்டது. அதைச் சோதனையிட்டபோது அதற்குள் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

கஞ்சாவைக் கரைக்குக் கொண்டுவர முடியாத கடத்தல்காரர்கள் அதைக் கடலில் கைவிட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-20-66)

## மீண்டும்...

டல் ஒன்று நடைபெற்றது. அதில் சம்பந்தப்பட்ட திணைக்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வனப்பகுதியை வழங்குவதற்கு இதுவரை மறுப்புத் தெரிவித்துவந்த வனவளத் திணைக்களம் நேற்றைய கலந்துரையாடலில் சாதகமான பதிலை வழங்கியுள்ளது. அதையடுத்து சுற்றுச்சூழல் சாதக, பாதக அறிக்கையின் பின்னர் இந்தத் திட்டம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று கலந்துரையாடலில் அமைச்சர்கள் தீர்மானித்தனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள மிகவும் முக்கியமான ஆறாகப் பாலியாறு காணப்படுகின்றது. 68.4 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த ஆறு வவுனியா மாவட்டத்தின் புளியங்குளத்தில் ஆரம்பித்து, வடக்கு மற்றும் வடமேற்குத் திசைநோக்கி நகர்ந்து முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைக் கடந்து கடலுக்குள் கலக்கின்றது.

பாலியாற்றை இடைமறித்து மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 4.6 கிலோமீற்றர் நீளமும், 41 அடி உயரமும் கொண்ட மண் அணைக்கட்டு அமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ள நீர்த்தேக்கமே பாலியாறு குடிதண்ணீர்த் திட்டமாகும்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசசெயலாளர் பிரிவும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளும் குடிதண்ணீரைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இந்தத் திட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்வாங்க அடிப்படையில் நிறைவுசெய்யப்பட்டுள்ள நிலையில், பாலியாற்றுத் திட்டத்துக்குத் தேவையான வனப்பகுதியை வழங்க முடியாது என்று வனவளத் திணைக்களம் முரண்டுபிடித்து வந்தது. இதனால், இந்தத் திட்டமே முடங்கும் ஆபத்துஏற்பட்டிருந்தநிலையிலேயே, துறைசார் அமைச்சர்கள் குழு வடக்குக்கு வந்திருந்தது. (அ-எ-26)

## வெடிப்புச்...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி கடந்த ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி அடையாளம் காணப்பட்டது. குழாய் நீர் பொருத்தும் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு பிரதான வீதியோரத்தில் இந்த மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

அதன்தொடர்ச்சியாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டமருத்துவ அதிகாரி கே.வாசுதேவா மற்றும் யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன் ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் 52 மனித என்புத்தொகுதிகள் அங்கிருந்து மீட்கப்பட்டன. அத்துடன் ஆடைகள், துப்பாக்கி ரவைகள் உட்பட வேறு தடயப்பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புத் தொகுதிகளின் பகுப்பாய்வு அறிக்கையில் இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள்? என்ன காரணத்தால் இறந்தார்கள்? அவர்களின் வயது போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.


மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளில் 31 பெண்களுடையவை என்றும், 21 ஆண்களுடையவை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இறந்தவர்களின் வயது எல்லை 12 முதல் 53 வயது வரை உள்ளது. அதேநேரம் பெரும்பாலானவர்கள் 13 முதல் 30 வயதுடையவர்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

32 பேரின் உயிரிழப்புக்கு வெடிப்புச் சம்பவம் அல்லது வெடிப்புக் காயம் காரணமாகவுள்ளது. துப்பாக்கிச்சூட்டுக் காயத்தால் 7 பேர் உயிரிழந்துள்ளனர். வெடிப்புச் சம்பவம் மற்றும் துப்பாக்கிச்சூடு காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். பெரும்பாலான உயிரிழப்புகள் வெடிப்புக் காயங்களால் ஏற்பட்டுள்ளன என்பது பகுப்பாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தாய் மடியில்
17 . 02 . 1951



இறையடியில்
13 . 07 . 2025

**யோசப் மரியதாஸ்**
(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் MSF, ACF, Unicef, SDC நிறுவனங்களின் முன்னை நாள் கள உத்தியோகத்தர்)

உத்தரியமாதா கோயிலடி (வடமூலை) வயாவிளானைப் பிறப்பிடமாகவும் அன்னாள் ஆலய வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் மரியதாஸ் அவர்கள் நேற்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப்-இசெபெல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற மர்சலின்-மேரிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் மேரி திரேசாவின் அன்புக் கணவரும், சபீனா நையிற்றிங்கேல் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-மாகாண பணிப்பாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம்-வடமாகாணம்), யூடிற்றா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம்-புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெறோம் அன்ரனிதாஸ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-மாநகர சபை யாழ்ப்பாணம்), எட்மென்ராஜ் (பிரதேச அபிவிருத்தி வங்கி-சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெரிசன், ஜெறினா, லேயோவின் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் இயேசுராஜா, றீற்றா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகனியா, யோபிடலிஸ் ஆகியோரின் மாமனாரும், அற்புதராசா (அமுதக்கடல்-கனகபுரம் வீதி, கிளிநொச்சி), கிருஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (15.07.2025) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு வயாவிளான் உத்தரியமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 739 3239**
**077 444 7759**

# போலி ஆவணங்களுடன் மணல் கடத்தியோர் கைது

யாழ்ப்பாணம், ஜுலை 14

போலி அனுமதிப் பத்திரங்களைத் தயாரித்து மணல் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மணல் கடத்தலுக்குப் பயன்படுத்திய டிப்பர் வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சாவகச்சேரிப் பொலிஸார் இரண்டு டிப்பர் வாகனங்களை வழி மறித்து சோதனையிட்டனர். வாகனங்களுக்குள் ஆற்று மணல் காணப்பட்ட நிலையில், மணல் எடுத்து செல்வதற்கு வழங்கப்பட்டதாகக் கூறி அனுமதிப்பத்திரத்தைச் சாரதிகள் கையளித்துள்ளனர். அவற்றைச் சோதனையிட்ட பொலிஸார் அவை போலியானவை என்பதைக் கண்டறிந்தனர்.

அதையடுத்துச் சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சாவகச்சேரிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-20)

# குடும்பஸ்தரின் மீது தாக்குதல் பொலிஸார் மீது குற்றச்சாட்டு

பளை, வண்ணான்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளான நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸாரே அவரைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தி.சிறிதரன்காந்தன் என்ற குடும்பஸ்தரே காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

புலோப்பளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு சமூகவலைத்தளங்கள் ஊடாக விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சிக்கின்றார் என்ற குற்றச்சாட்டில் விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரது நண்பரான தி.சிறிதரன் காந்தனிடம் அவரைப் பற்றி விசாரித்துள்ளனர். பொலிஸ் என அடையாளமிடப்பட்ட மேல் சட்டை அணிந்திருந்த 4 பேர் பலாத்காரமாக மோட்டர் சைக்கிளில் ஏற்றிசென்றனர் என்றும், குடும்பஸ்தர் மீது தாக்குதல் நடத்தி இடைவழியில் இறக்கிவிட்டுச் சென்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-35)


# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

## நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு

## ஆடி மாத அதிரடித் தள்ளுபடி

திருமணப் பட்டுச்சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
ரெடிமேட் சல்வார்கள்
பார்ட்டி புரொக்
டொப்
கவுண்
ஸ்கேட், ப்ளவுஸ்
சேட், ரீ சேட்
பெட்சீற்
மொடர்ன் ரெஸ்
வேஷ்டிகள்
லெகின்ஸ்
லெஹங்கா
சிறுவர்களுக்கான ஆடைகள்



மற்றும் ஏராளமான ஆடைத்தெரிவுகள்

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: 12.07.2025 முதல் 05.08.2025 வரை
(வாரத்தில் 7 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்)


# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 12 . 1941



மறைவு
12 . 07 . 2025

**வடிவேலு சிவானந்தன்**
**(ஓய்வு பெற்ற இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்)**

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், செட்டித்தெரு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு சிவானந்தன் அவர்கள் கடந்த 12.07.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - இராசரத்தினம் தம்பதிகளின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - நாகபூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுகன்ஜா (கனடா), தயாளன் (கனடா), குணாளன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செயலோகஇராசதுரை (கனடா), சுசீலாதேவி (கனடா), துளசிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், சரவணமுத்து, வரலக்ஷ்மி மற்றும் தனலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, லோகேஸ்வரா மற்றும் மகேஸ்வரி, திருநாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சரண்ஜா, சுவாதிகா, திவ்வியன், சாம்பவி, பைரவி, கிரிதரன், தாமரை, சுருதி, ஜனஹாசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2025) மாலை செட்டித்தெரு, பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 04.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளவும்.

செட்டித்தெரு,
பருத்தித்துறை

**தகவல்: குடும்பத்தினர்**
**021 226 2876, 077 204 8145**

(CR 45501) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org